SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

டிசம்பர் - 2018

# TNPSC ZERO CURRENT AFFAIRS MAINS

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# டிசம்பர் - 2018

## 3 மதிப்பெண் வினாக்கள்

1. **2018 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி (தமிழ்) விருதைப் பெற்றவர் யார்?**
   a) திரு.எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் சாகித்திய அகாடமி (தமிழ்) விருதைப் பெற்றார்.
   b) நாவல்-சஞ்சாரம்
   c) தமிழ்நாட்டிலுள்ள கரிசல் பூமியிலுள்ள நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்க்கைத் துயரத்தைப் பற்றிய நாவல் இது.

2. **தேஜஸ் இரயிலானது அண்மைச் செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் என்ன?**
   I. உயர்தர அதிவேக இரயில்
   II. முழுவதும் குளிர்வூட்டப்பட்ட பெட்டிகள்
   III. மணிக்கு சராசரியாக 70 கி.மீ வேகத்தில் 495 கி.மீட்டரை ஏழு மணி நேரத்தில் கடக்கும்.
   IV. இருக்கைகளுக்கான பயணச்சீட்டு விலையானது ரூபாய் 1140 முதல் 1200 மற்றும் மேம்படுத்தப்பட்ட பெட்டிகளுக்கு ரூபாய் 2100 – 2200 வரை வசூலிக்கப்படும்
   V. இந்த இரயிலானது சென்னை மற்றும் மதுரைக்கிடையே அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது

3. **ஹனிபா சாரா என்பவர் யார்? அண்மைச் செய்திகளில் இவர் இடம் பெற்றதன் காரணம் என்ன?**
   a) இவர் ஏழு வயது நிரம்பிய சிறுமியாவார்.
   b) வேலூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூர் இவரது ஊராகும்.
   c) தன்வீட்டில் கழிப்பறை கட்டுவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டார்.
   d) ஆம்பூர் நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

4. **எழுத்தாளர் பிரபஞ்சன் எழுதிய நூல்களுள் சிலவற்றைக் குறிப்பிடுக.**
   a) வானம் வசப்படும்
   b) ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்
   c) பிரமம்
   d) நேற்று மனிதர்கள்
   e) ஆண்களும் பெண்களும்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

f) மானுடம் வெல்லும்

g) சுகபோக தீவுகள்

h) மகாநதி

5. **நாவிக் (NaVIC) வரையறு**

i) NavIC என்பது இந்தியப் பரப்புக்கான இடஞ்சுட்டி அமைப்பு.

ii) இந்திய இடஞ்சுட்டி அமைப்பு (NAVigation with Indian Constellation)

iii) முதலில் இந்தியப் பகுதிகளுக்கான இடஞ்சுட்டி செயற்கைக் கோள் அமைப்பு என்றழைக்கப்பட்டது. பின்னர் 2016-ஆம் ஆண்டிலிருந்து நாவிக் என்று மாற்றப்பட்டது.

iv) இதில் புவியிணைக்க சுற்றுப்பாதை (Geosyncronous Orbit) மற்றும் புவிநிலைசுற்றுப்பாதை (Geostationary Orbit) ஆகிய சுற்றுப்பாதைகளில் இயங்கும் 7 செயற்கைக் கோள்கள் அடங்கும்.

6. **போகிபீல் பாலம் பற்றிக் குறிப்பு வரைக.**

i) நீளத்தில் ஆசியாவில் இரண்டாமிடத்திலும், இந்தியாவில் முதலிடத்திலும் உள்ள பாலமாகும்.

ii) நீளமான சாலை மற்றும் தொடர்வண்டிப் போக்குவரத்துப் பாலமாகும்.

iii) (4.94km) - இருவழி ஈரடுக்குப் பாலம்

iv) அஸ்ஸாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்காகக் கட்டப்பட்டுள்ளது.

v) பிரதமரால் தொடங்கிவைக்கப்பட்டது.

7. **பிரசாத் (PRASAD) திட்டம் பற்றிக் கூறுக.**

i) புனிதயாத்திரை புனரமைப்பு மற்றும் ஆன்மீக சுற்றுலாவை மேம்படுத்தும் திட்டம்.

ii) புனிதத் தலங்களின் கட்டமைப்பை உலகத்தரம் வாய்ந்ததாக உயர்த்துவதன் மூலம் நீடித்த முறையில் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தல்.

iii) இத்திட்டமானது உத்திரகாண்ட் மாநிலத்தில் உள்ள கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி, மத்தியப்பிரதேசத்தின் அமர்கண்டக் மற்றும் ஜார்க்கண்ட்டின் பரஸ்நாத் ஆகிய புனிதத் தலங்களை உள்ளடக்கியது.

iv) மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டமாகும்.

8. **'Angry Bird' என்றழைக்கப்படும் செயற்கைக் கோள் எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?**

i) ஜிசாட் - 7A செயற்கைக்கோளானது 'Angry Bird' என்றழைக்கப்படுகிறது.

ii) 39-வது தகவல் தொடர்பு செயற்கைக்கோள்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

iii) இந்திய விமானப்படைக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட இராணுவ தகவல் தொடர்பு செயற்கைக்கோள்.

iv) செலுத்து வாகனம் : ஜிஎஸ்எல்வி - F11

v) 2018 நவம்பர் 19 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது.

9. **2018 ஆம் ஆண்டில் இந்தியாவை எத்தனைப் புயல்கள் தாக்கின?**

i) 2018 ஆம் ஆண்டில் இந்தியாவை ஏழு புயல்கள் தாக்கின.

ii) அரபிக்கடல்-சாகர், மெகுனு, லுமான்.

iii) வங்காள விரிகுடா - தயே, திட்லி, கஜா, பெதாய்.

10. **2018 டிசம்பர் மாதத்தில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களின் பெயர்களைக் கூறுக.**

| மாநிலம் | முதலமைச்சர்கள் |
|---|---|
| **தெலங்கானா** | K. சந்திரசேகர ராவ் |
| **மத்தியப்பிரதேசம்** | கமல்நாத் |
| **மிசோரம்** | ஜோராம்தங்கா |
| **ராஜஸ்தான்** | அசோக் கெலாட் |
| **சட்டீஸ்கர்** | பூபேஷ் பாகல் |

11. **கந்தமால் ஹல்தியின் முக்கியத்துவத்தைக் கூறுக.**

a) கந்தமால் ஹல்தி என்பது ஒரு மஞ்சள் வகையாகும்.

b) இதன் மருத்துவ குணத்தால் பிரபலமான ஒன்றாக உள்ளது.

c) இது ஒடிசாவில் உள்ள கந்தமால் என்னும் ஊரில் உள்ள பழங்குடி மக்களின் முக்கிய பணப்பயிராகும்.

d) பயன்கள்: வீட்டு உபயோகப் பொருட்கள், அழகுபடுத்தும் மற்றும் மருத்தவப் பயன்பாடுகள்.

e) சமீபத்தில் இம்மஞ்சளுக்கு புவிசார் குறியீடானது (GI tag) வழங்கப்பட்டது.

12. **இருவாச்சி திருவிழாவைப் (Hornbill Festival) பற்றி சுருக்கமாக எழுதுக.**

a) நாகலாந்து மக்களின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தைப் புதுப்பிக்கும், பாதுகாக்கும், நிலைக்கவைக்கும் நோக்கத்துடன் அம்மாநில மக்களால் இருவாச்சி திருவிழாவானது கொண்டாடப்படுகிறது.

b) மேலும் இது 'திருவிழாக்களின் திருவிழா' என்று அழைக்கப்படுகிறது.

c) இருவாச்சி பறவையின் எச்சரிக்கை நிலையை காத்திடும் நோக்கத்திலும் இப்பறவைக்கு மதிப்பு கொடுக்கும் முறையிலும் இத்திருவிழாவானது நாகா இன மக்களால் கொண்டாடப்படுகிறது.

d) இத்திருவிழாவானது மாநில சுற்றுலா, கலை மற்றும் கலாச்சாரத் துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. மேலும் இதற்கு மத்திய அரசானது ஆதரவளிக்கிறது.

e) 1963 டிசம்பர் 1 அன்று இருவாச்சி திருவிழாவானது தொடங்கி வைக்கப்பட்டது.

13. **குடியுரிமை (திருத்த) மசோதா 2016 என்றால் என்ன?**

a) குடியுரிமை சட்டம் 1955-ஐ திருத்தம் செய்யும் நோக்கத்துடன் ஜூலை 19 அன்று மக்களவையில் இம்மசோதாவானது அறிமுகப்படுத்தப்பட்டது.

b) இம்மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், ஆப்கானிஸ்தான், வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாட்டிலிருந்து சட்டவிரோதமாக வெளியேறிய சிறுபான்மை சமூகத்தினர் இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு தகுதியானவர்களாவர்.

c) ஆப்கானிஸ்தான், வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தானிலிருந்து சட்ட விரோதமாக வெளியேறி இந்தியாவில் குடியேறிய இந்து, சீக்கிய, புத்த, சமண, பார்சிய அல்லது கிறுத்தவ மதத்தைச் சார்ந்தவர்களை சிறையிலடைக்கவோ அல்லது நாட்டைவிட்டு வெளியேற்றவோ முடியாது.

d) மேலும் குடியுரிமை சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு இவர்கள் 11 ஆண்டுகளுக்கு பதிலாக 6 ஆண்டுகளிலேயே குடியுரிமையைப் பெற முடியும்.

14. **இந்தியாவில் புதியதாகப் பரிந்துரைக்கப்பட்ட நேர மண்டலம் பற்றிக் கூறுக.**

a) இந்திய சீர் நேரம் (IST) இரண்டு நேர மண்டலங்களைப் பரிந்துரைத்துள்ளது அவை,

b) IST-I என்பது தற்போதைய நேரமண்டலமாகும், UTC+5.30.

c) IST-II என்பது UTC + 6.30, ஏனென்றால், நாட்டின் கிழக்கு மற்றும் மேற்குப்பகுதிகளுக்கிடையே உள்ள நேர வேறுபாட்டின் காரணமாக உருவானதாகும்.

d) இரண்டு நேர மண்டலங்களில் எல்லைக்கோடானது 89°52E° என்ற நிலையில் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கத்திற்கிடையில் குறுகிய எல்லையாக அமைகிறது.

e) இக்கோட்டிற்கு மேற்கில் உள்ள மாநிலங்கள் IST-I UTC+5.30 என்ற நேர மண்டலத்தைப் பின்பற்ற வேண்டும்.

f) இக்கோட்டிற்கு மேற்கில் உள்ள அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, அருணாச்சல் பிரதேசம், மணிப்பூர், மிசோரம், திரிபுரா, அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் IST-II (UTC + 6.30) என்ற நேரமண்டலத்தைப் பின்பற்ற வேண்டும்.

15. **2018 டிசம்பரில் நடைபெற்ற இராணுவப் பயிற்சிகளைக் கூறுக.**

| இராணுவப் பயிற்சிகள் | நாடுகள் | வகை |
|---|---|---|
| **ஷின்யு மைத்ரி - 18** | இந்தியா மற்றும் ஜப்பான் | முதலாவது வான் பயிற்சி |
| **Sea Vigil** பயிற்சி | இந்திய இராணுவம், கடற்படை, விமானப்படை | கடலோர பாதுகாப்புப் பயிற்சி |
| **Hand-in-Hand** | இந்தியா மற்றும் சீனா | இராணுவப் பயிற்சி |
| **Indra Navy 2018** | இந்தியா மற்றும் ரஷ்யா | கடற்பயிற்சி |
| **ஏவியா இந்திரா** | இந்தியா மற்றும் ரஷ்யா | விமானப் பயிற்சி |

16. **பெண்கள் தொழில்முனைவோர் தளம் 2.0 பற்றிக் கூறுக.**

a) மத்திய அரசால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

b) நாட்டின் தொழில்முனைவோருக்கான சூழ்நிலையில் மாற்றம் ஏற்படுத்தும் நோக்கத்தில் கொண்டு வரப்பட்டது.

c) இது வருங்காலத்திற்கான ஆதார மூலமாக மற்றும் பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் தளமாக இருத்தல் வேண்டும்.

d) பொருளாதாரத்தின் பல்வேறு பங்குதாரர்கள் அடைவு மைய உதவி, வழிகாட்டுதல், நிதியளிப்பு, இணைக்கம், சந்தைப்படுத்துதலுக்கான உதவி ஆகியவற்றை செய்வதற்கான கருவியாகச் செயல்படுகிறது.

e) இது இந்திய பெண் தொழில்முனைவோரை ஆதரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் நோக்கத்தில் நிதி ஆயோக்கினால் 2017-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

17. **மரபணு பதிப்பு (Gene Editing) என்றால் என்ன?**

a) இது ஒரு வகையான மரபணு பொறியியலாகும், இதில் செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட நியூக்ளியஸ்கள் அல்லது மூலக்கூறு கத்தரிக்கோலைப் பயன்படுத்தி ஒரு உயிரினத்தின் ஜீனோமில் டி.என்.ஏ.வை உட்செலுத்தவோ நீக்கவோ அல்லது மாற்றவோ முடியும்.

b) இந்த நியூக்ளியஸ்கள் விரும்பிய இடத்தில் குறிப்பிட்ட இரட்டைப் புரி இடைவெளிகளை உருவாக்குகின்றன.

c) இவ்விடைவெளிகள் பின்னர் மறு இணைவு அல்லது புது ஜீன்களை உட்செலுத்துவதன் மூலம் சரிசெய்யப்படுகிறது. பின் எதிர்பார்த்த வகையில் மாறுபாடு அடைகிறது.

18. **பழங்குடியினரின் கல்விக்கான அரசியலமைப்பு விதிகளை எழுதுக.**

a) **சரத்து 46**: நலிவுற்ற மக்களுக்கு, குறிப்பாக பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு அரசானது முக்கியத்துவமளித்து அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்துதல்.

b) **சரத்து 29 (1)**: தனித்துவமான மொழிகள் மற்றும் கலாச்சாரங்களைப் பேணுதல் இச்சரத்தானது முதலில் பழங்குடியினருக்கு முக்கியத்துவமளிக்கிறது.

c) **சரத்து 154 (4)**: சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையிலுள்ள சமூகத்தினர் அல்லது பட்டியலினத்தவர் அல்லது பழங்குடியினருக்கான வளர்ச்சிக்காக முக்கிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள அதிகாரமளிக்கிறது.

d) **சரத்து 275 (1):** அரசியலமைப்பின் பட்டியல் 5 மற்றும் 6 ன் கீழ் உள்ள மாநிலங்களுக்கு (பழங்குடியினரைக் கொண்ட மாநிலங்கள்) நன்கொடையளித்தல்.

e) **சரத்து 350A:** அரசானது ஆரம்ப நிலைக் கல்வியளித்தலின் போது தாய்மொழி வழியில் கல்வி அளித்திட தகுந்த ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

19. **நிலக்கரி மாற்றீட்டுத் திட்டம் என்றால் என்ன?**

a) இது தனியார் மின் உற்பத்தியாளர்கள் மற்றும் ஒழுங்கு படுத்தப்படாத சிமெண்ட் மற்றும் எஃகு துறைகளுக்கான நிலக்கரி விநியோக முறைமைத் திட்டமாகும். அதாவது நிலக்கரியை இறக்குமதி செய்வது அல்லது உள்நாட்டு விநியோகத்தை இணைப்பதன் மூலம் நிலக்கரி விநியோகத்தை சரி செய்தலாகும்.

b) குறைந்தது ஆறு மாதங்களுக்கு இரண்டு நுகர்வோர்கள் தங்களுக்கிடையே முழு அல்லது பகுதியளவு நிலக்கரியை மாற்றிக் கொள்ளும் இரு தரப்பும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும்.

c) இதில் பங்கேற்பாளர்கள் மின்னனு தளத்தின் வழியாக பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலக்கரி மாற்றீடு விநியோகத்திற்கான நேரமானது, பதிவு செய்தவர்களுக்கு முன்கூட்டியே தீர்மானம் செய்யப்படுகிறது.

d) இந்திய நிலக்கரி நிறுவனமானது இத்திட்டத்தினை வழி நடத்தும் நிறுவனமாகும்.

20. **மருத்துவ உபகரணங்கள் விதி 2017-ன் முக்கிய அம்சங்களை எழுதுக.**

a) இவ்விதியானது தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையத்திற்கு 15 மருத்துவ சாதனங்களை விலை நிர்ணய முறைக்குக் கீழ் கொண்டுவர வழிவகை செய்கிறது.

b) மருத்துவ சாதனங்களின் புதிய விதிகளின்படி, இது தொடர்பான ஆபத்து மற்றும் மருந்து உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் ஆபத்தை சரிசெய்வதற்கான முறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

c) சர்வதேச நடைமுறையின்படி அமைக்கப்பட்டுள்ள மருத்துவ விசாரணை செய்யும் சாதனங்களின் மருத்துவ விசாரணை செய்வதற்காக தனியாக கட்டுப்பாடுகள் தேவை.

d) முதல் முறையாக உரிமத்தை குறிப்பிட்ட கால இடைவெளியில் புதுப்பிக்கத் தேவையில்லை என்ற முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

21. **ஆதித்யா L1 விண்கலம் பற்றி கூறுக.**

i) சூரியனைப் பற்றி ஆய்வு செய்யும் இந்தியாவின் முதல் விண்கலம்.

ii) இது கண்ணிற்கு புலப்படும் உமிழ்வு ஒளி வளைய வரைவாகும். இது பூமியின் தாழ் வட்டப்பாதையில் 800km தொலைவில் நிலைநாட்டப்பட இருக்கிறது.

iii) இது சூரிய-புவி அமைப்பில் உள் லெக்ராஞ்சியன் புள்ளி 1-ல் உள்ள சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட இருக்கிறது.

iv) மேலும் இது சூரியனின் போட்டோஸ்பியர், குரோமோஸ்பியர் மற்றும் கொரோனா ஆகியவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்ய உதவுகிறது.

22. **இந்தியாவில் புலிகள் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவை?**

i) **புலிகள் பாதுகாப்புத் திட்டம்:** இந்திய அரசானது 1973-ம் ஆண்டு புலிகள் வாழிடங்களைக் காக்கும் நோக்கத்தில் அதற்கான வாழிடத்திற்கு உள்ளேயே (in-situ) அவற்றினைப் பாதுகாப்பதற்காக இத்திட்டத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தற்போது புலிகள் பாதுகாப்புப் பகுதிகளின் எண்ணிக்கையானது 50 ஆக உயர்ந்துள்ளது.

ii) **தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம்:** 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் சட்டரீதியாகக் கொண்டுவரப்பட்ட அமைப்பாகும். இது வனஉயிர் பாதுகாப்புச் சட்டம் 1972-ன்படி செயல்படுகிறது. தற்போது இது புலிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற பாதுகாப்பு முன்னெடுப்புகளை நடைமுறைப்படுத்துகிறது

iii) **புலிகளுக்கான கண்காணிப்புத் திட்டம் அவற்றிற்கான சூழ்நிலை மற்றும் தீவிர பாதுகாப்பு (M-STrIPES):** தேசிய புலிகள் பாதுகாப்பு வாரியத்தால் தொடங்கப்பட்டது. இந்தியா முழுவதும் மென்பொருள் மூலம் புலிகளை கண்காணித்தலே இதன் நோக்கமாகும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

23. **NJAC சட்டவரைவு பற்றி விவாதி.**

i) **NJAC –** தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம்.

ii) இது இந்தியாவில் உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கவும் பதவி உயர்வு மற்றும் இடம்மாற்றம் செய்யவும் உருவாக்கப்படவுள்ள ஆணையமாகும்.

iii) இவ்வாணையமானது, நீதிபதிகள் தேர்வுக் குழு (Collegium) என்றழைக்கப்படும். உச்ச நீதிமன்றம் மற்றும் 24 உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிக்கும் குழுவிற்கு மாற்றாக உருவாக்கப்படுகிறது.

iv) புதிதாக சரத்து 124A ஆனது (தேசிய நீதிபதிகள் நியமன ஆணைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை பற்றிய விவரங்களைத் தருகிறது) இந்திய அரசியலமைப்பில் இணைக்கப்பட உள்ளது.

v) இம்மசோதாவானது, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் இதர நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் ஆனது நீதிபதிகளின் நியமனம் பற்றிய விவரங்களை அளிக்கிறது.

24. **கிம்பர்லி செயல்முறை என்றால் என்ன?**

i) கடினத் தன்மை கொண்ட வைரங்களுக்கான வாணிப ஒழுங்குமுறைகளுக்கான சர்வதேச சான்றிதழ் அளிப்புத் திட்டம்.

ii) வைர வியாபாரத்தை பாதிக்கும் காரணிகளைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

iii) கிம்பர்லி செயல்முறை சான்றிதழளிப்புத் திட்டமானது கடினத் தன்மை கொண்ட வைர வியாபாரத்திற்கான விதிகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

iv) கிம்பர்லே செயல்முறை சான்றிதழிப்புத் திட்டத்தின் தலைமைப் பொறுப்பினை இந்தியா 2018 ஜனவரி 1 முதல் வகித்து வருகிறது.

25. **எதற்காக நமக்கு மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் தேவைப்படுகிறது?**

a) மரபணு மாற்றுப் பயிர் என்பது நவீன உயிரியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மரபணுக்கள் மாற்றப்பட்டு அதன் மூலமாக ஏற்படும் புதிய சேர்க்கையின் விளைவாக உருவாக்கப்படும் பயிர்களாகும்.

b) எடுத்துக்காட்டாக, மரபணுமாற்றுப் பயிரானது இயற்கை முறை மகரந்தச் சேர்க்கையில்லாமல் செயற்கை முறையில் ஜீனை உட்செலுத்தி நடைபெறும் இனப்பெருக்க முறையாகும்.

c) எல்லா பயிர்களும் அதன் இருப்பிடத்தை விட்டு பிரிக்கப்பட்டு வேறு இடத்தில் கட்டுப்படுத்தி வளர்க்கப்படுகிறது. இருந்தாலும் மேற்கூறிய ஜீனில் மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் மட்டுமே மரபணுமாற்றுப் பயிர்கள் என்றழைக்கப்படுகின்றன.

d) மரபணுமாற்றப் பயிரின் தேவைகள்

- அதிக விளைச்சல்
- செலவு குறைவு
- அதிக இலாபம்
- உடல் நலம் மற்றும் சுற்றுச்சூழல் நலனில் முன்னேற்றம்

26. **EXSEEDSAT 1 பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.**

a) இந்தியாவின் முதல் தனியார் செயற்கைக்கோள்

b) மும்பையில் உள்ள சான்டா கிரசைச் சார்ந்த Exceed Space என்னும் ஸ்டார்ட் அப் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டது.

c) Space X நிறுவனத்தால் இது 17 நாடுகளுக்குச் சொந்தமான 63 செயற்கைக்கோள்களுடன் சேர்த்து இது விண்ணில் செலுத்தப்பட்டது.

d) உலோகக் கலவையினால் உருவாக்கப்பட்ட இச்செயற்கைக்கோளானது ஒரு சிறிய வகை தொலைத் தொடர்பு செயற்கைக் கோளாகும். இது 1 கி.கி எடையும் 10 செ.மீ × 10 செ.மீ × 10 செ.மீ. அளவும் கொண்டது.

e) இது தொடக்கநிலையில் உள்ள வானொலிகளை சேவைகளுக்கு பயன்படக் கூடியது.

f) இது தனியார் வானொலி இயக்குபவர்களுக்கு பெரிய உற்சாகத்தை அளிக்கின்றது. மேலும் பேரழிவு ஏற்படும்பொழுது அனைத்து செய்திகளையும் ஒருங்கிணைத்து வழங்க உதவுகிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## 8 மதிப்பெண் வினாக்கள்

**1.** **வாடகைத்தாய் (ஒழுங்குமுறை) மசோதா - 2016- விவரி.**

**வாடகைத்தாய் மூலம் குழந்தை பெறுதல்**

a) விருப்பமுடைய தம்பதிகள், வாடகைத்தாய் மூலம் தங்களுக்கான குழந்தையைப் பெற்றுக் கொள்வதே வாடகைத் தாய் மூலம் குழந்தைப் பெறுதலாகும்.

b) தம்பதிகள் கண்டிப்பாக இந்தியக் குடிமக்களாகவும் திருமணமாகி குறைந்தது ஐந்து வருடங்களானவர்களாகவும் மேலும் தம்பதிகளில் ஒருவராவது மலட்டுத்தன்மை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

c) வாடகைத் தாயானவர், தம்பதிகளுக்கு நெருங்கிய உறவினராகவும், தனக்கென்று சொந்தமாகக் குழந்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

d) மருத்துவச் செலவுகளைத் தவிர வேறு எந்த தொகையும் கொடுக்க கூடாது.

e) இவ்வாறு பிறக்கும் குழந்தையானது அத்தம்பதிகளின் சொந்தக் குழந்தையாகக் கருதப்பட வேண்டும்.

**மசோதாவின் நோக்கங்கள்**

a) சுரண்டலில் இருந்து பெண்களைப் பாதுகாத்தல்

b) பொதுநல வாடகைத் தாய் முறைகளுக்கு (நெருங்கிய உறவினர்கள் மூலம் மட்டும்) இம்மசோதா அனுமதி அளித்துள்ளது.

**வாடகைத்தாய் முறையின் வகைகள்**

a) **வியாபார ரீதியிலான வாடகைத்தாய் முறை:** மருத்துவ செலவுகள் தவிர வாடகைத்தாய்க்கு பிற சன்மானங்கள் வழங்கும் முறை.

b) பொதுநல வாடகைத்தாய் முறை : இம்முறையில் மருத்துவ செலவுகள் தவிர வேறு எந்த சன்மானமும் வாங்காமல் பிள்ளை பெற்றுக் கொடுக்கும் வாடகைத்தாயாக முன்வருதல்.

**வாடகைத்தாய் மசோதாவின் முக்கிய அம்சங்கள்.**

a) இந்திய குடிமக்களுக்கு வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற உரிமை உண்டு, வெளிநாட்டவர் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு (NRI) வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற அனுமதி இல்லை.

b) ஒரினச் சேர்க்கையாளர்கள், மனைவி அல்லது கணவன் இன்றி தனித்து வாழ்பவர்கள், ஏற்கனவே குழந்தை உள்ளவர்கள் போன்றவர்கள் வாடகைத் தாய்மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது.

c) வாடகைத் தாய் முறையின் மூலம் குழந்தை பெற நினைக்கும் தம்பதிகள் அதற்கான சான்றிதழை அதற்கு பொறுப்பானவர்களிடம் கருத்து பெற்றிருக்க வேண்டும்.

d) ஜம்மு காஷ்மீர் தவிர மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் இம்மசோதாவானது பொருந்தும்.

e) இம்மசோதாவின் படி 25 முதல் 35 வயதுவரையுடைய பெண்கள் வாடகைத்தாயாக செயல்படலாம்.
f) தன் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே அப்பெண் வாடகைத் தாயாக இருக்க வேண்டும்.
g) அப்பெண் குழந்தை பெற விரும்பும் தம்பதிகளின் நெருங்கிய உறவினராக இருக்க வேண்டும்.
h) வாடகைத்தாய் முறை மூலம் குழந்தை பெற விரும்பும் தம்பதிகளுக்கான நிபந்தனைகள் : பெண் 25-30 வயதுக்குள்ளும், ஆண் 26-55 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு திருமணமாகி குறைந்தது 5 வருடங்களாகியிருக்க வேண்டும்.
i) மேலும் இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

**2. போக்ஸோ சட்டத்திருத்தம் பற்றி எழுதுக.**

போக்ஸோ - பாலியல் துன்புறுத்தலில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம்
a) போக்ஸோ சட்டத் திருத்தத்திற்கு கேபினட் அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.
b) குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.
c) பிரிவு - 4, பிரிவு - 5 மற்றும் பிரிவு - 6 ஆகியனவற்றில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.
d) மிகவும் கொடுமையான முறைகளில் குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு மரணதண்டனை உட்பட கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டும்.
e) இயற்கைப் பேரழிவுகளின் போது குழந்தைகளின் மீது பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுபவர்களிடமிருந்து பாதுகாக்கும் விதமாக பிரிவு-9இல் திருத்தங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.
f) கடுமையான தண்டனையளித்தல் மூலமாக குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் குறைவதற்கு இம்மசோதா உதவி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
g) பாதிப்படையக் கூடிய குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் அவர்களின் கண்ணியத்திற்கும் தகுந்த பாதுகாப்பளிக்க வேண்டும்.
h) இத்திருத்தமானது குழந்தை வன்கொடுமை மற்றும் அதற்கான தண்டனைகளைப் பற்றிய தெளிவைத் தரும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டுள்ளது.

**3. பிரயாக்ராஜ் கும்பமேளா 2019 பற்றி விவாதி.**

1) பிரயாக்ராஜ் கும்பமேளா 2019 என்பது 2019 ம் ஆண்டு ஜனவரி 15 முதல் மார்ச் 4 வரை நடைபெறும் ஆன்மீகத் திருவிழாவாகும்.

**கும்பமேளா பற்றிய விவரங்கள்**

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

1) கும்பமேளா என்பது இந்து மத நம்பிக்கையின் படி புனிதமாக கருதப்படும் திருவிழாவாகும்.
2) உலகளவில் அதிக அளவிலான மக்களால் ஒன்று சேர்ந்து கொண்டாடப்படும் திருவிழாவாகும்.
3) 55 நாட்கள் நடக்கவிருக்கும் இக்கும்பமேளாவில் புனித நதிகளான கங்கை, யமுனை மற்றும் புராணங்களில் கூறப்பட்ட சரஸ்வதி ஆகியவை சங்கமிக்கும் இடத்தில் பத்து மில்லியனுக்கும் அதிகமான பக்தர்கள் நீராடுவார்கள்.
4) இத்திருவிழாவில் துறவிகள், ஞானிகள், சாதுக்கள், முனிவர்கள், மற்றும் பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

**கொண்டாட்டம்**

1) கும்பமேளா என்பது 12 வருடங்களுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் திருவிழாவாகும்.
2) இந்தியாவில் நான்கு இடங்களில் நான்காண்டுகளுக்கு ஒருமுறை மாறி மாறி கும்பமேளா கொண்டாடப்படுகிறது. கொண்டாடப்படும் புனிதத் தலங்களாவன,
   - உத்திரகாண்ட்டின் கங்கை நதிக்கரையிலுள்ள ஹரித்துவார்.
   - மத்தியப்பிரதேசத்தின் ஷிப்ரா நதிக்கரையிலுள்ள உஜ்ஜயின்
   - மகாராஷ்டிராவின் கோதாவரி நதிக்கரையிலுள்ள நாசிக்
   - உத்திரபிரதேசத்தில் கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆகிய மூன்று புனித நதிகள் சங்கமிக்கும் பிரயாக்ராஜ்.

**புனிதத் தலங்களைத் தேர்ந்தெடுக்கும் முறை**

1) சூரியன், சந்திரன் மற்றும் வியாழன் ஆகிய கோள்களின் நிலை மற்றும் அமைவிடத்தைப் பொறுத்து ஒவ்வொரு புனிதத்தலங்களிலும் கும்பமேளாவானது கொண்டாடப்படுகிறது.
2) இந்துமதப்படி புனித நேரமாகக் கருதப்படும் இம்மூன்று கோள்களும் அதன் அமைவிடத்தை முழுமையாக ஆட்கொள்ளும் நேரத்தில் இந்தக் கும்பமேனாவானது கொண்டாடப்படுகிறது.

**4. மகப்பேறு நலச்சட்டம் (திருத்தச் சட்டம்) 2017 மற்றும் தந்தைகளுக்குமான பேறுகால விடுப்பின் பயன்களை விவரி.**

1. இச்சட்டமானது குழந்தையின் நலனில் கவனம் செலுத்துவதற்காக கருவுற்ற பெண்களுக்கு முழு ஊதியத்துடன் கூடிய விடுப்பினை 26 வாரங்களுக்கு (முன்னதாக 12 வாரங்கள்) அளிக்கிறது.
2. இச்சட்டம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் பணிபுரியும் அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்தும்.
3. மகப்பேறு நலனைப் பெறுவதற்கான தகுதியாக, அப்பெண் கண்டிப்பாக அந்த நிறுவனத்தில் கடந்த 12 மாதங்களில் 80 நாட்களாவது பணிபுரிந்திருக்க வேண்டும்.

4. 2 குழந்தைகளுக்குப்பின் பிறக்கும் குழந்தைக்கான மகப்பேறு விடுப்பு 12 வாரங்களாகும்.
5. 3 மாதங்களுக்குக் குறைந்த குழந்தையைத் தத்து எடுக்கின்ற தாய்மாருக்கும் மற்றும் குழந்தையை வழங்குகின்ற தாய்க்கும் மகப்பேறு விடுப்பு 12 வாரங்களாக இருக்கும்.
6. மேலும் இச்சட்டமானது பெண்களைப் பணியமர்த்தும் போது அவர்களுக்கான மகப்பேறு விடுப்பு பற்றிய விவரங்களைப் பற்றி அந்நிறுவனத்தின் முதலாளி கூற வேண்டியதை அவசியமாக்கியுள்ளது.

**தந்தைகளுக்கான விடுப்பின் நன்மைகள்**

1. **குழந்தை நலன் சிறப்பாகுதல்** : இதனால் குழந்தை பிறப்புக்கு முன்னும் பின்னும் குழந்தையின் நலன் மேம்படும் இதன் மூலம் குழந்தைகளின் இறப்பையும் குறைக்கலாம்.
2. **ஊழியர்களின் இருப்புத் தன்மை** : இதனால் ஊழியரின் இருப்புத் தன்மை விகிதமும் வேலை தொடர்பான திருப்தியும் அதிகரிக்கும்.
3. **வாழ்நாள் முழுவதும் நேர்மறையான தாக்கம் ஏற்படுதல்** : தந்தை தன் குழந்தையுடன் அதிக நேரம் செலவிடுவதால் குழந்தைகளின் மனநலன் மற்றும் அறிவாற்றல் அதிகரிக்கிறது என்று பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
4. **பெண்கள் வாழ்வில் ஒரு நேர்மறையான விளைவினை ஏற்படுத்துதல்** :
   1) ஆண்களுக்கு அதிக அளவில் விடுப்பு கிடைத்தால் பெண்கள் தங்கள் வேலையில் முழு கவனத்துடன் ஈடுபட முடியும். இதனால் அவர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் பெண் தொழிலாளர்களிடம் இது ஒரு நேர்மறையானது விளைவை ஏற்படுத்தும்.
5. **பெண்களுக்கு சுமை குறைதல்**
   1) தந்தைகளுக்கான பேறுகால விடுப்பினை அவர்கள் உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுது, வீட்டின் வேலைப்பளுவை தந்தை மற்றும் தாய் ஆகிய இருவருமே சமமாக பகிர்ந்து கொள்ள இது வழிவகுக்குமென்று பல்வேறு ஆய்வுகள் கூறுகின்றன.

**5. குழந்தை பாதுகாப்புக் கொள்கை வரைவு பற்றி மதிப்பீடு செய்க.**

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலமேம்பாட்டு அமைச்சகமானது குழந்தை பாதுகாப்புக் கொள்கை வரைவை வெளியிட்டுள்ளது.

**இக்கொள்கை வரைவின் சிறப்பம்சங்கள்**

1) **நோக்கம்** : குந்தைகளுக்கு எதிரான வன்முறை, சுரண்டல் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு அளிப்பதன் மூலம் அனைத்து குழந்தைகளுக்குமான பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
2) **நிறுவனங்களுக்கான நிபந்தனைகள்** : அனைத்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள், (பெருநிறுவனங்கள் மற்றும் ஊடகம் உட்பட), அரசு அல்லது

தனியார் துறைகள் அனைத்தும் குழந்தைகள் நலனைப் பாதுகாப்பதற்கான நிபந்தனைகளை அளிக்கிறது.

3) **பொறுப்புகளை உறுதிசெய்தல்** : நிறுவனங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கெதிராக நடக்கும் வன்கொடுமைகளைப் பற்றிப் புகாரளிக்க தகுந்த அதிகாரியை நியமனம் செய்து அதற்கான நடைமுறைகளையும் உறுதி செய்தல் வேண்டும்.

4) **புகாரளிக்கும் முறை** : குழந்தைகளுக்கு எதிராக உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ அல்லது பாலியல் வன்முறைக்குள்ளாக்கும் நபர்களைப் பற்றிய புகாரை. 1098 என்ற உதவிய மைய எண்ணிடமோ, காவல் துறையிடமோ அல்லது குழந்தை நலத்துறை வாரியத்திடமோ அளிக்கலாம்.

5) குழந்தைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளும் அளவைகள் : குழந்தைகளுக்காக வேலை செய்யும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள், குழந்தைகளுக்கெதிரான வன்முறை, அவர்களுக்கான இணைய பாதுகாப்பு மற்றும் சேவைகள் போன்ற விவரங்களை அவர்களின் வயதுக்கேற்றாற் போல் சேகரிக்க வேண்டும்.

6) குழந்தைகளைப் பற்றிய ஆய்வை மேற்கொள்ளும் அமைப்புகள் அந்த ஆய்வகத்திற்கு குழந்தைகளிடம் நேரடியாகவோ அல்லது அவர்களது பெற்றோர்களிடமிருந்தோ செய்திகளைப் பெறும் பொழுது அக்குழந்தைகளை துன்புறுததவோ அல்லது அதிர்ச்சிக்குள்ளாக்கவோ இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

7) பாதுகாப்பு நடவடிக்கைகள் : பொது இடங்களில் குழந்தைகளுக்கு ஏதுவான மண்டலமும், தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை வைத்துக் கொள்ள பாதுகாப்பான இடமும் உருவாக்கப்பட வேண்டும்.

**இந்தியாவில் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக உள்ள சட்டரீதியான நடைமுறைகள்:**

1) **சிறுவர் நீதி (சிறுவர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 :** இச்சட்டம் சிறார்களின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் சிறார்களுக்கான சட்டத்தில் உள்ள கருத்து வேறுபாடுகள் ஆகிய விவரங்களைக் கொடுக்கிறது.

2) **போக்ஸோ - பாலியல் வன்கொடுமைகளிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012** : பாலியல் வன்கொடுமை, ஆபாசப்படம் போன்ற குற்றங்களை சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளுபவர்களிடம் இருந்து பாதுகாப்பளிப்பதுடன் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக சாட்சி கூறவரும் சிறுவர்களுக்கு தகுந்த பயமில்லாத சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

3) **குழந்தை பெரும் முன்பே பாலினத்தைக் கண்டறிதலைத் தடுக்கும் திட்டம் 1994**: இத்திட்டத்தின் மூலம் முன்கூட்டியே கருவின் பாலினத்தைத் தெரிந்து கொண்டு பெண் குழந்தைகளைக் கொல்லும் முறை தடுக்கப்படுகிது.

4) **குழந்தைகள் உரிமை பாதுகாப்பு வாரியச் சட்டம் 2005** : இச்சட்டம் தேசிய மற்றும் மாநில அளவில் குழந்தை பாதுகாப்பு வாரியம் அமைக்கவும் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளுக்கு உடனடியாக தண்டனை வழங்க சிறார் நீதிமன்றங்கள் அமைக்கவும் வலியுறுத்துகிறது.

5) **குழந்தைகள் கட்டாயம் மற்றும் இலவச கல்வி உரிமை பெறும் சட்டம் 2009** : இது சிறுவர்கள் தங்கள் தொடக்க கல்வியை முடிக்கும் வரை அவர்களைக் கைது செய்ய தடை விதித்துள்ளது. (அதாவது எட்டாம் வகுப்பு முடிக்கும் வரை).

6) **குழந்தைத் திருமண தடைச்சட்டம் 2006** : இச்சட்டம் குழந்தைத் திருமணத்தை தடை செய்கிறது.

7) **குழந்தை தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம் 2016** : குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான சட்டத்தை அதிகரித்து அதை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுகிறது.

8) **குழந்தைகளுக்கான தேசிய செயல் திட்டம் (NPAC) 2016 :** இத்திட்டம் தேவைப்படும் சமயங்களில் 2013 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கொள்கையோடு இணைந்து தக்க நடவடிக்கைகளை எடுக்க உதவுகிறது.

9) **குழந்தைகள் உரிமைகளுக்கான ஐ.நா உடன்படிக்கை** : இவ்வுடன்படிக்கையில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது.

## 6. GSAT – 11 பற்றி விவாதி.

a) இஸ்ரோ உருவாக்கியதிலேயே இதுதான் அதிக எடையுடைய செயற்கை கோளாகும்.

b) இது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தால் (ESA) ஏரியன் 5 செலுத்து வாகனத்தில் பிரெஞ்சு கயானாவிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.

c) இதன் எடை 5855 கி.மீ இதுவரை இஸ்ரோ வடிவடைந்த செயற்கைக் கோள்களை விட இரு மடங்கு அதிக எடை கொண்டது.

d) அதிக திறன் வாய்ந்த செலுத்து வாகனம் ஜிஸ்எல்வி எம்.கே.II வால் 4000 கி.கி வரை எடை கொண்ட செயற்கைகோளை மட்டுமே செலுத்த முடியும்.

e) இது இஸ்ரோவின் புதிய வகையிலான ஹெச்.டி.எஸ் அதாவது அதிக பகுதிகளுக்கு இணையதள வசதி அளிக்க இயலும்.

f) இது 16gbps என்ற அளவிலான அதிவேக இணையதள வசதி அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

g) இந்த அகண்ட அலைவரிசையானது தற்பொழுது ஒளியிழை மூலமாக பகுதியளவு மற்றும் சௌகரியமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

h) ஜிசாட் – II மூலம் இந்தியாவில் முதன்முறையாக ka-பட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

i) KU பட்டையானது 12-18 GHz என்ற எல்லைக்குள்ளும் ka பட்டையானது 26.5-40 GHz எல்லைக்குள்ளும் உள்ளது.

Group I Mock Test on 24th February 2019 at 27 Centres across the state
Group II (OT) / II A Test Batch starts on 11th March 2019
www.shankariasacademy.com www.tnpscthervupettagam.com

j) Ka பட்டையின் மூலம் தகவல்களை அனுப்பினால் அது நூறுமடங்கு அதிக வேகத்துடன் செல்லும்.

k) இச்செயற்கைக் கோளானது புவிநிலைச் சுற்றுப்பாதையில் சுமார் 36,000 கி.மீ உயரத்தில் இந்தியாவில் 74 கிழக்கு கோணத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

**7. தேசிய மருத்துவ உபகரணங்கள் மேம்பாட்டு வாரியம் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் எழுதுக.**

a) இவ்வாரியமானது தொழில்துறை கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறைச் செயலரின் தலைமையில் நிர்வகிக்கப்படுகிறது.

b) அரசின் சம்மந்தப்பட்ட துறைகளைத் தவிர, சுகாதாரத் துறை மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.

c) இவ்வாரியத்திற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை விசாகப்பட்டினத்திலுள்ள ஆந்திரப்பிரதேச மெட்டெக் (MedTech) மண்டலம் வழங்குகிறது.

**இவ்வாரியத்தின் குறிக்கோள்கள்:**

d) இந்திய மருத்துவ சாதனங்கள் தொழிற்துறையின் ஊக்குவிப்பு மற்றும் மேம்படுத்தும் அமைப்பாகவும், இடங்களை எளிதாக்கும் அமைப்பாகவும் இவ்வாரியம் செயல்படுகிறது.

e) மருத்துவ சாதனங்களுக்காக தொழிற்சாலைக்கான ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு செயல்முறையை எளிமையாக்க அதன் நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது.

f) புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவளித்து அவற்றின் சர்வதேச வர்த்தக நெறிகளுக்கு ஏற்றாற் போல் உற்பத்தியாளர்களுக்கு சான்றிதழ் அளித்து இத்துறையை உலகத் தரத்தில் அதிக ஏற்றுமதி உடைய துறையாக மாற்றுகிறது.

g) சர்வதேச சந்தைகளிலுள்ள சிறந்த நடைமுறைகளை எடுத்துக் கொள்வதன் மூலம் மருத்துவ சாதனங்களுக்கான சர்வதேச நெறிகளை மற்றும் தரநிலைகளை பரவச் செய்கிறது.

h) சர்வதேச அளவிலான தொழிற்சாலை ஒழுங்கமை மற்றும் ஒழுங்கமையற்ற தேவைகளை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் புரிந்து கொள்ள வழி செய்கிறது.

i) வலுவான மற்றும் மாறும் தன்மை கொண்ட முன்னுரிமை சந்தை அணுகல் (PMA) கொள்கையை இந்திய உற்பத்தியாளர்களின் பலத்தை தெரிந்து கொண்டதன் மூலம் வழி நடத்துவதுடன் மேலும் தேவையற்ற இறக்குமதிகளையும் குறைக்கிறது.

j) DIPP மற்றும் DOP க்கான முன்னுரிமை சந்தை அணுகல் வழிகாட்டுதல் படி இந்தியாவில் அனைத்து இடங்களிலும் பொது கொள்முதல் அறிவிப்பை கண்காணித்தல்.

k) மருத்துவ சானங்கள் தொழிற்துறையில் இருக்கும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டிணைவு (LLPs) மற்றும் மற்ற நிறுவனங்களை சரிபார்க்கிறது. மேலும் இது உற்பத்தியை அதிகரித்து புதிய துறைகள் உள்நுழையச் செய்து அத்துறையை வலிமையடையச் செய்கிறது.

l) மருத்துவத் தொழில்நுட்பத் துறையை வலிமைப்படுத்துவதற்காக தொழிற் துறையைப் பற்றிய கருத்து தெரிவிப்பு, சர்வதேச நடவடிக்கை கொள்கை மற்றும் செயல் முறை தலையீடுகள் ஆகியவற்றிற்கான பரிந்துரைகளை அளிக்கிறது.

## 15 மதிப்பெண் வினாக்கள்

1. **பின்வருவனவற்றை விளக்கவும்.**

**i) இந்திய முறை மருத்துவத்திற்கான தேசியக் குழு மசோதா - 2018 ஐ விளக்கவும்.**

a) இந்திய முறை மருத்துவத்திற்கான தேசியக் குழு மசோதா 2018ன் வரைவுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

b) இது, வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தம் பொருட்டு தற்போது உள்ள ஒழுங்குமுறையாளரான இந்திய மருத்துவத்திற்கான மத்தியக் குழுவை (CCIM) புதிய அமைப்பைக் கொண்டு மாற்றியமைக்க எண்ணுகிறது.

c) NCIM ஆனது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மலிவு விலையிலான மருத்துவ சேவை கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யும்.

d) தற்போது உள்ள ஹோமியோபதி ஒழுங்குமுறை அமைப்பான ஹோமியோபதிக்கான மத்தியக்குழுவை மாற்றியமைக்கும் நோக்கம் கொண்ட ஹோமியோபதிக்கான தேசியக் குழு-2018 மசோதாவின் வரைவிற்கும் மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

**முக்கிய அம்சங்கள்**

a) ஆயுர்வேதா, யுனானி சித்தா மற்றும் சோவா-ரிக்பா போன்ற அமைப்புகளின் (முறையே) கீழ் ஆயுர்வேதா, யுனானி, சித்தா மற்றும் சோவா-ரிக்பா ஆகிய ஒட்டுமொத்த கல்வியை நடத்துவதற்காக நான்கு தன்னாட்சி அமைப்புகளைக் கொண்ட தேசியக் குழுவினை அமைக்க இம்மசோதா வலியுறுத்துகிறது.

b) வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பொது நுழைவுத் தேர்வு மற்றும் வெளியேற்றத் தேர்வு போன்றவற்றையும் இந்த வரைவு மசோதா முன்வைக்கிறது. இந்திய மருத்துவத்தை பயிற்சி செய்த அனைத்து பட்டதாரிகளும் இத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

c) மேலும் ஆசிரியர்களின் தரத்தை ஆய்வதற்காக அவர்களது நியமனத்துக்கு முன்பும் பதவி உயர்வுக்கு முன்பும் ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வு ஒன்றை நடத்த இம்மசோதா வலியுறுத்துகிறது.

d) இரண்டு பொதுவான அமைப்புகளை உருவாக்குகிறது. இந்திய முறை மருத்துவத்துக்கான கல்வி நிறுவனங்களை மதிப்பீடு செய்து அனுமதி வழங்குவதற்கான மதிப்பீட்டு அமைப்பையும், தேசிய பதிவை பராமரிப்பதற்கும் நெறிமுறை சிக்கல்களை கையாள்வதற்கும் இந்திய முறை மருத்துவ பயிற்சியாளர்களுக்கான நெறிமுறை மற்றும் பதிவு அமைப்பையும் கொண்டுள்ளது.

**ii) இந்திய மருந்து முறைகளை சுட்டிக் காட்டுக,**

**யுனானி முறை மருத்துவம்**

a) யுனானி முறையானது கிரேக்க நாட்டில் தோன்றியது. அதற்கான அடித்தளத்தினை அமைத்தவர் ஹிப்போகிரேட்ஸ் ஆவார்.
b) இருப்பினும் இந்த முறையானது அதன் தற்போதுள்ள வடிவத்திற்கு அக்கால இலக்கியத்தின் பெரும்பகுதியை அரபு மொழியில் மொழிபெயர்த்து அவற்றை காத்ததோடு மட்டும் அல்லாமல் அவர்கள் காலத்து மருந்தை அவர்களின் சொந்த பங்களிப்பின் மூலம் வளப்படுத்தியுள்ளது.
c) இது 11ஆம் நூற்றாண்டு கால கட்டங்களில் அரேபியர்கள் மற்றும் பாரசீகர்களால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
d) அதிக அளவிலான யுனானி கல்வி, ஆராய்ச்சி மற்றும் சுகாதார நிறுவனங்களை இந்தியா கொண்டுள்ளது.

**ஆயுர்வேத**

a) ஆயுர்வேதா என்ற வார்த்தையானது இரண்டு தனி வார்த்தைகளின் இணைவே ஆகும்.
b) ஆயுர்வேதா என்பது வாழ்கையின் அறிவியல் ஆகும்.
c) இது உடல் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு உறுப்புகளை சமநிலை வைத்திருக்க எண்ணுகிறது. இது உணவுப் பழக்கம், உணவுக் கட்டுப்பாடு, மருந்துகள் மற்றும் நடத்தை மாற்றத்தின் மூலம் நல்ல உடல் நலத்தை கொடுக்கவல்லதாகும்.

**சித்த மருத்துவமுறை**

a) சித்த மருத்துவ முறையானது தென்னிந்தியாவின் சில பகுதிகளில் குறிப்பாக தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ளது.
b) சித்தா என்ற வார்த்தையானது சாதனை என்றறியப்படுகின்ற சித்தி என்ற வார்த்தையில் இருந்து வந்ததாகும்.
c) மருத்துவம் மற்றும் யோகா போன்ற துறைகளில் உச்ச அறிவை அடைந்த மனிதர்களே சித்தர்களாவர்.

**ஹோமியோபதி**

a) ஹோமியோபதி என்ற வார்த்தையானது இரண்டு கிரேக்க வார்த்தைகளிலிருந்து உருவானதாகும்.
b) ஹோமோய்ஸ் என்றால் ஒரே மாதிரியான என்று பொருள். பே தோஸ் என்றால் துன்பப்படுகின்ற என்று பொருள்படும்.
c) இது இந்தியாவில் 18ம் நூற்றாண்டில் தோன்றியதாகும்.
d) ஹோமியோபதி என்பது மிகக் குறைவாக உட்கொள்ளக் கூடிய அளவில் மருந்துகளை பரிந்துரைப்பதன் மூலம் நோய்களை குணப்படுத்தம் முறையாகும். இம்மருந்தானது ஆரோக்கியமான நபர்களால் உட்கொள்ளப்பட்டால், நோய்தாக்க அறிகுறிகளைப் போன்றே அறிகுறிகளை உருவாக்கும் தன்மை கொண்டதாகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

e) இது மனம், உணர்வு ஆன்மீகம் மற்றும் உடல் நிலைகள் ஆகியவை உள் சமநிலைகளை மேம்படுத்துவது போன்று நோய்வாய்ப்பட்ட ஒரு நபரின் மேல் ஒரு முழுமையான நடவடிக்கை எடுக்கிறது.

## 30 மதிப்பெண் வினாக்கள்

1. **மாற்றுப் பாலினத்தவர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) - 2016 மசோதா பற்றி விளக்கமாக எழுதவும்.**

i) ஒரு நபர் பகுதி ஆண் அல்லது பகுதி பெண்ணாக இருந்தால்; அல்லது ஆண் மற்றும் பெண்ணின் கலப்பாக இருந்தால்; அல்லது பெண்ணாகவும் அல்லாமல் ஆணாகவும் அல்லாமல் இருந்தால் அந்த நபரை மாற்று பாலினத்தவராக இம்மசோதா வரையறுக்கின்றது.

ii) கூடுதலாக, அந்நபரின் பாலினமானது பிறப்பின் போது தீர்மானிக்கப்பட்ட பாலினத்தோடு பொருத்தக் கூடாது. இது, திருநம்பி, திருநங்கை, இடைப்பட்ட பாலின மாறுபாடு கொண்ட நபர்கள் மற்றும் பாலின அடையாளம் அற்றவர்கள் போன்றவர்களை உள்ளடக்கும்.

iii) மாற்று பாலினத்தைச் சேர்ந்த நபர் இம்மசோதாவின் கீழ் உரிமைகளைப் பெறுவதற்கு மாற்றுப் பாலினத்தவர் என்ற சான்றிதழை அடையாள அங்கீகாரச் சான்றிதழாக பெற வேண்டும்.

iv) இந்த மசோதாவானது கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் மாற்றுப் பாலினத்தவருக்கு எதிரான பாகுபாட்டை தடுக்கிறது. இது போன்ற துறைகளில் நலத்திட்டங்களை வழங்க மத்திய மற்றும் மாநில அரசுகளை வழிநடத்துகிறது.

v) ஒருமாற்றுப் பாலினத்தவரைக் கட்டாயப்படுத்தி பிச்சை எடுக்க வைத்தல், பொது இடத்திற்குள் அனுமதி மறுப்பு உடல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் போன்றவையான குற்றங்கள் அபராதம் மற்றும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையை அளிக்கும்.

**முக்கியச் சிக்கல்கள் மற்றும் பகுப்பாய்வுகள்**

i) சுயபாலியல் நிர்ணய உரிமையை அரசியலமைப்பின் 21வது சரத்தின் கீழ் உள்ள சுயமரியாதை மற்றும் சுய விருப்பத்திற்கான உரிமைகளின் ஒரு பகுதியாக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ii) இந்த மசோதாவானது மாற்றுப் பாலினத்தவர் என்று அறியப்படும் நபருக்கு சுயபாலியல் நிர்ணய உரிமை உண்டு என்று கூறுகிறது.

iii) மாற்றுப் பாலினத்தவரை அங்கீகரிப்பதற்கு அடையாளச் சான்றிதழை மாவட்ட பரிசோதனைக் குழுவானது வழங்கும்.

iv) மசோதாவில் உள்ள மாற்றுப் பாலினத்தவர்களுக்கான வரையறையானது சர்வதேச வல்லுனர்கள் மற்றும் இந்திய வல்லுனர்களால் அங்கீகரிக்கப்பட்ட சொற்பொருளில் இருந்து மாறுபடுகிறது.



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

v) இந்த மசோதாவானது, திருநம்பி, திருநங்கை, இடைப்பட்ட பாலின வேறுபாடுகள் கொண்ட நபர்கள் மற்றும் பாலின அடையாளம் அற்றவர்கள் போன்ற வார்த்தைகளை அதனுடைய மாற்றுப் பாலினத்தவருக்கான சொற் பொருளில் உள்ளடக்கியுள்ளது.

vi) தற்போது அமலில் இருக்கும் சில குற்றவியல் மற்றும் தனிநபர் சட்டங்களானது ஆண் மற்றும் பெண் ஆகிய பாலினத்தை மட்டுமே குறிக்கின்றது.

**மாற்றுப் பாலினத்தவருக்கான அடையாளச் சான்றிதழ்**

i) இந்த மசோதாவின் கீழ் மாற்றுப் பாலினத்தவர் என்று அங்கீகரிக்கப்பட்ட நபர், சுய பாலிய நிர்ணய உரிமையைக் கொண்டவராவார்,

ii) மாற்றுப் பாலினத்தைச் சேர்ந்த நபரானவர், மாற்றுப் பாலின நபர் என்பதற்கான அடையாள அங்கீகார ஆதாரமாக இருப்பதும் மற்றும் உரிமைகளை வழங்குதலுக்குமான அடையாளச் சான்றிதழைப் பெற வேண்டும்.

iii) அத்தகைய சான்றிதழை பெறுவதற்கான விண்ணப்பம் மாவட்ட மாஜிஸ்திரேட் / ஆட்சியர் அவர்களிடத்தில் சமர்பிக்கப்பட வேண்டும்.

iv) மாவட்ட பரிசோதனைக் குழுவானது,.

   a. தலைமை மருத்துவ அதிகாரி
   b. மாவட்ட சமூகநலத்துறை அதிகாரி
   c. உளவியல் நிபுணர் அல்லது மனநல மருத்துவர்
   d. மாற்றுப் பாலினத்தவர் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதி
   e. அரசு அதிகாரி

v) இந்தக் குழுவின் பரிந்துரையின் படி மாற்றுப் பாலினத்தவர் என்று அடையாளச் சான்றிதழை மாவட்ட மாஜிஸ்திரேட் அவர்கள் வழங்குவார்.

vi) பாலினத்தில் எதாவது மாற்றம் இருந்தால் அடையாளச் சான்றிதழ் பெற்ற முறையையே பின்பற்றி மாற்றுச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம்.

**மாற்று பாலினத்தவர் பாகுபாட்டிற்கு எதிரான தடை**

i) பின்வருவனவற்றில் தொடர்புடைய சேவை வழங்க மறுத்தல் அல்லது நியாமற்ற முறையில் நடத்துவது போன்ற மாற்று பாலினத்தவருக்கு எதிரான பாகுபாட்டை இம்மசோதாவானது தடை செய்கிறது.

   a. கல்வி
   b. வேலைவாய்ப்பு
   c. சுகாதாரநலன்
   d. பொதுமக்களுக்கான பொருட்கள் மற்றும் வசதிகளுக்கான அனுகல்
   e. இயக்கத்திற்கான உரிமைகள்
   f. சொத்தை உரிமையாக்குதல் மற்றும் வாடகைக்கு விடுவதற்கான உரிமை
   g. தனியார் அல்லது அரசு அலுவலகங்களில் பணிபுரிவதற்கான வாய்ப்பு
   h. மாற்றுப் பாலினத்தவரைக் கொண்டுள்ள தனியார் அல்லது அரசு அமைப்புகளுக்கான அணுகல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii. அனைத்து பொது மற்றும் தனியார் அமைப்புகளில் ஆள்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு உள்ளிட்ட வேலைவாய்ப்பு விவகாரங்களில் மாற்றுப் பாலினத்தவருக்கு எதிரான பாகுபாடானது தடை செய்யப்பட்டுள்ளது.

iii. ஒரு அமைப்பானது 100க்கும் மேற்பட்ட நபர்களைக் கொண்டிருந்தால் இம்மசோதா தொடர்பான புகாரை நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் இம்மசோதா தொடர்பான புகார்களை கையாள்வார்.

**வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பான நன்மைகள்**

i) மாற்றுப் பாலினத்தவருக்கான வாழ்வாதாரத்திற்கு ஆதரவு மற்றும் உதவியளிப்பதற்கான நலத்திட்டங்களை மத்திய அல்லது மாநில அரசுகள் வழங்கலாம்

ii) மாற்றுப் பாலினத்தவருக்குச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான நடவடிக்கைகளை மத்திய மற்றும் மாநில அரசுகள் எடுக்கலாம்.
இவை,
   a. தனி எச்.ஐ.வி கண்காணிப்பு மையங்கள்
   b. பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கான ஆலோசனை
   c. மருத்துவத் திட்ட மறுஆய்வு
   d. விரிவான காப்பீட்டுத் திட்டம், போன்றவைகளை உள்ளடக்கியது.

iii) கல்வி நிறுவனங்களானது மாற்றுப் பாலினத்தவருக்கு விளையாட்டு, பொழுது போக்கு மற்றும் ஓய்வு நேர செயல்பாடுகளுக்கான உள்ளடக்கிய-கல்வி மற்றும் வாய்ப்புகளை வழங்கலாம்.

**மாற்றுப் பாலினத்தவருக்கான தேசியக் குழு (NCT)**

i) மாற்றுப்பாலின நபர்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் சட்டமியக்குதல் மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மாற்றுப் பாலினத்தவருக்கான தேசியக் குழுவான அமைக்கப்படலாம்.

**NCT ஆனது பின்வரும் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும்**

   a. சமுகநீதி மற்றும் மேம்பாட்டுத் துறை, சுகாதாரத் துறை மற்றும் சிறுபான்மையினர் போன்று அமைச்சகங்கள்
   b. நிதி ஆயோக்
   c. தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் பெண்களுக்கான தேசியக்குழு
   d. மாநில அரசுகள்
   e. மாற்றுப்பாலினத்தவர் சமூகத்திலிருந்து நியமிக்கப்பட்ட நபர்
   f. அரசு சாரா நிறுவனங்களில் இருந்து நிபுணர்கள்

**குற்றங்கள் மற்றும் அபராதங்கள்**

**பின்வரும் குற்றங்களை இம்மசோதா குறிப்பிடுகிறது**



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

(i) மாற்றுப் பாலினத்தவரை கட்டாயப்படுத்தி பிச்சையெடுக்கவைத்தல் அல்லது கட்டாயப்படுத்தி தொழிலில் ஈடுபடுத்துவது அல்லது பிணைத் தொழிலாளியாக வைத்திருத்தல்.

(ii) பொது இடங்களைப் பயன்படுத்தத் தடை விதிப்பது.

(iii) வீடுகள், கிராமங்கள் அல்லது மற்ற தங்குமிடங்களில் வசிப்பதற்கான தடை விதித்தல்.

(iv) உடல் ரீதியிலான, பாலியல் ரீதியிலான, வார்த்தை மூலம், மனரீதியிலாக அல்லது பொருளாதார ரீதியிலான துன்புறுத்தல்.

(v) இக்குற்றங்களானது அபராதத்துடன் 6 மாதங்களிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைப்படுத்தலைப் பெற்றுத் தரும்.

2. **தேசியக் கண்ணோட்ட ஆவணத்தை மதிப்பிடுக.**

**இந்தியா@75 கண்ணோட்ட ஆவணம்** : இந்த ஆவணத்தை நிதி ஆயோக் வெளியிட்டது, பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பினை உருவாக்க 2022-23ம் ஆண்டிற்குள் 9% மொத்த உள்நாட்டு உற்பத்தி அவசியமாகும்.

**2022-23 இலக்கு:**

i. 2017-18 ஆம் ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29 சதவீதமாக இருந்த முதலீட்டை 2022-23ம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 36 சதவீதமாக உயர்த்துவதே இலக்காகும்.

ii. ஜி.டி.பி வரி விகிதம் 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தப்பட உள்ளது.

iii. அனைத்து கிராமங்களையும் டிஜிட்டல் முறையில் இணைத்தல்.

iv. பண்ணை : eNAM ஐ அதிகரிப்பதன் மூலம் விவசாயத் தொழில் முனைவோர்கள்.

v. சாலைகள் மற்றும் இரயில்வேக்கள் : சாலைப் பாதுகாப்பு விதி அமைக்கப்பட வேண்டும் மற்றும் இரயில்வேயானது கட்டணங்களை ஆராய வேண்டும்.

vi. பொது மற்றும் நீதி சேவைகள் : குடிமைப் பணிகளுக்குள் நுழைவதற்கான அதிகபட்ச வயது வரம்பை 30 வயதிலிருந்து 27 வயதாகக் குறைத்தல்.

**இந்தியா@75 - மக்களின் செயல்திட்ட இலக்கு**

**கல்வி மற்றும் திறன் மேம்பாடு**

1. 100 சதவீதக் கல்வி : மலிவான, அணுக்கூடிய, பொறுப்புள்ள கல்வி.
2. அனைவருக்குமான சம வாய்ப்பினை உறுதிப்படுத்துதலுக்கான சந்தை வழிமுறைகள்.
3. அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய மற்றும் தரமான முதன்மை நிலைக் கல்வி
4. வயதுவந்தவர்களுக்கான கல்வியை இரவுப் பள்ளிகள் மூலம் ஊக்கப்படுத்துதல்.
5. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் 100% பதிவு
6. 10ம் வகுப்பு வரை 0% இடைநிறுத்தலில்லாக் கல்வி

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

7. இந்தியா 100% கல்வியறிவுச் செயல்பாட்டை எட்டியது. ஒவ்வொரு இந்தியருக்கும் எழுதவும் படிக்கவும் முடியும்
8. இந்தியாவானது 200 மில்லியன் பல்கலைக்கழக பட்டதாரிகள் மற்றும் 500 மில்லியன் தொழில் திறன் கொண்ட மக்களையும் சேர்த்து உலகளவில் பணியமர்த்தக் கூடிய வலுவான 700 மில்லியன் தொழிலாளர்கள் பயனடையும் வகையில் உருவாக்கியுள்ளது.
9. அறிவு உருவாக்கம், திறன் மேம்பாடு, தொழிற் முனைவுப் பாதுகாப்பிற்கான உலகளாவிய மையமாக ஆக்குவதற்கான உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பை இந்தியா உருவாக்குகிறது.
10. இந்தியாவானது தொழிலகக் கூட்டிணைவின் மூலம் மதிப்புகள் அடிப்படையிலான கற்பித்தல்-மையக் கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முறை பயிற்றுனர்களுக்கான உலகத்தரக் கட்டமைப்பை அமைத்ததோடு அளவுகோல் வழங்குநராகவும் உள்ளது.

**தொழில் நுட்பம் மற்றும் புத்தாக்கம்**

1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பமானது நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.
2. கிராமப்புற மக்களுக்கும் சிறந்த தகவல் தொடர்புக்குமான தொழில்நுட்பம்.
3. பெரும்பகுதி மக்களுக்கு வழங்கக் கூடிய வகையிலான தொழில்நுட்பம்.
4. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
5. இந்தியப் பொருட்கள் மற்றும் சேவைகளானது புத்தாக்கம் மற்றும் தரநிலையின் முன்னோடியாக உள்ளது.
6. இந்தியாவானது அடிமட்ட அளவிலான பிரச்சினைகளை, பெருமளவிலான மக்கள் பயன்படுகிற வகையில் இலாபகரமாக தீர்ப்பதற்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
7. இந்தியாவானது அதன் உலகத்தரம் வாய்ந்த உலகின் ஆய்வு மற்றும் மேம்பாட்டுக் கட்டமைப்பின் மூலம் தலைசிறந்த ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதோடு பிறநாட்டினரையும் ஈர்க்கின்றது.
8. இந்தியாவானது அதன் ஆற்றல் தேவைகளை பெரும்பாலும் தூய்மை ஆற்றல் மூலமாக பூர்த்தி செய்கிறது.
9. உலக அளவிலான புத்தாக்கத்திற்கு இந்தியா பிறப்பிடமாக இருக்க வேண்டும்.
10. புத்தாக்கத்தின் உலகத் தலைமை.
11. இந்தியா அதிகமான காப்புரிமைகளை பதிவு செய்ய வேண்டும்
12. புத்தாக்க கருத்துக்களை இந்தியா பாதுகாப்பதோடு காப்புரிமையும் பெற வேண்டும்.
13. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீத அடிப்படையிலான ஆய்வு மையத்திற்குரிய அரசு செலவினங்களை அதிகரித்தல்.

14. தொழில்நுட்ப அறிவியல் ஆராய்ச்சியை முன்செலுத்துவதற்காக ஐ.ஐ.டி.கள் மருத்துவ நிறுவனங்கள் போன்ற அதிகளவிலான தொழில்நுட்ப நிறுவனங்களை கொண்டிருத்தல்.
15. நமது ஆற்றல் பயன்பாட்டில் 60 சதவீதமானது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மீது சார்ந்திருக்க வேண்டும்.
16. மழைநீர் சேகரிப்பு, கடல் அலைகள், குறை உயர் அலைகள், உயிரி எரிபொருள், சூரிய ஆற்றல், காற்று ஆற்றல் போன்ற புதுப்பிக்கத்தக்க வளங்களை பயன்படுத்துதல்.
17. நிலையான வளர்ச்சியின் மேம்பாடு
18. ஆற்றல் திறனை ஊக்குவித்தல்
19. அணு உலையானது இணைவு செயலின் (Fusion process) மூலம் இயங்குகிறது மற்றும் இது ஆற்றலை சேமிக்கிறது.

**வேளாண்மை**

1. இந்தியாவிற்கு இரண்டாவது பசுமைப்புரட்சி தேவை
2. பட்டினியில்லா இந்தியா
3. வேளாண் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தலைமையகமான நாடாக இந்தியா உருவாகலாம்
4. உயிரி உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக் கொல்லிகளானது செயற்கையாக உற்பத்தி செய்யப்படுவதை மாற்றியமைக்கும்.
5. உபரி உற்பத்தி, இறக்குமதியற்ற, சுய சார்பு உடையதாக திகழ்தல்.
6. உற்பத்தி / ஹெக்டேர் போன்றவற்றை 3 மடங்கு அதிகரித்தல்.
7. அனைவருக்குமான சுற்றுச்சூழல் ரீதியிலான உணவுப் பாதுகாப்பை இந்தியா எட்டியது.
8. விவசாயமானது முற்போக்கு வேளாண் சமூகத்தை உருவாக்கி விவசாயத்தை இலாபகரமானதாக மாற்றியது.
9. இந்திய வேளாண்மையானது அணுகக் கூடிய, தேவை அடிப்படையிலான மற்றும் சிறப்பாகப் பராமரிக்கப்படும் கட்டமைப்பைக் கொண்டதாகும்.
10. இந்தியக் கிராமங்களானது, வளர்ச்சியுடன் கூடிய பொருளாதார மண்டலங்களாக மாறியுள்ளது.
11. விவசாயம் மற்றும் விவசாயச் சேவைகளானது நமது நாட்டின் இளைஞர்களுக்குச் சிறந்த வேலை வாய்ப்புகளை அளிக்கிறது.
12. விவசாயத்தில் இடைத்தரகர்கள் மற்றும் தனியார்துறையின் ஈடுபாட்டை நீக்குதல்.
13. விவசாயிகளுக்கான நியாயவிலை கிடைக்கப் பெறச் செய்தல்
14. எளிமையான மற்றும் குறித்த காலத்திற்குள்ளான கடனுதவிக்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.
15. திறனற்ற விவசாயிகளைப் பயிற்றுவித்தல்.
16. நவீன அறிவியல் வேளாண் முறை மற்றும் முறைகளை அறிமுகப்படுத்துதல்.
17. ஒவ்வொரு மாவட்டங்களிலும் விவசாயப் பயிற்சி நிறுவனங்கள்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

18. அனைத்து விவசாயிகளுக்கும் 24 × 7 மணி நேரமும் மின் மற்றும் நீர் வழங்கல்.
19. தண்ணீர் மேலாண்மைக்கான முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துல்
20. நியாயமான விலையில் பூச்சிக் கொல்லிகள் மற்றும் உரங்கள் கிடைக்கப் பெறுதல்
21. ஒவ்வொரு கிராமங்களும் குறைந்தபட்சம் ஒரு தானியக் கிடங்காவது இருத்தல்.
22. ஒவ்வொரு கிராமங்களும் பல சிறப்பு குளிர்பானக் கிடங்கு வசதி உள்ளது
23. தானிய அடிப்படையிலான அணுகு முறையிலிருந்து தோட்டக்கலை, பண்ணை மற்றும் கால்நடை போன்ற பல்வேறுபட்ட அணுகு முறைக்கு மாறும் உத்திகள்.
24. மெழுகுவர்த்தி செய்தல் முதலிய சிறு குடிசைத் தொழில் போன்றவைகளுக்கு சரியான உதவி அளித்தல்.
25. இந்தியாவில் உள்ள கைவினைத் தொழில் ஆனது வளர்ச்சி அடைதல்.
26. வேளாண் பொருளாதாரத் தொழிற்சாலைகள் பெருக வேண்டும்.
27. விவசாயத்தில் பொது மற்றும் தனியார் கூட்டிணைவு
28. உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலைகளை ஊக்குவித்தல் மற்றும் ஒப்பந்த விவசாயத்தை ஆதரித்தல்.

**வர்த்தகங்கள்**

1. உலக வர்த்தகத்தில் முதல் 5 நாடுகளில் இந்தியா உள்ளது.
2. இந்தியாவானது உலகத் தர தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உயர்தர, புத்தாக்க உற்பத்தி மற்றும் சேவைகளுக்கான பிரதான மண்டலமாக உருவாகியுள்ளது.
3. இந்தியாவானது அதன் இளம் மக்கள் தொகையினரின் தொழில் முனைவு ஆற்றலை வெளிப்படுத்தியது.
4. இந்திய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களானது ஆதரவான வர்த்தகச் சூழலில் வளர்கின்றது.
5. இந்திய நிறுவனங்களானது நெறிமுறை ஆளுகையிலும் பெருநிறுவன சமூகப் பொறுப்பிலும் உலகளாவிய வரையறைகளாக உள்ளது.
6. அனைத்து அரசு வர்த்தகங்களும் பொது மற்றும் தனியார் கூட்டிணைவின் மூலமானதாக இருக்க வேண்டும்.
7. இந்தியாவானது ஆய்வு மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்துவதன் மூலம் தரத்திற்கு என்று அறியப்பட்ட உலக வணிகச் சின்னமாக மாறியுள்ளது.
8. அதிக எண்ணிக்கையிலான காப்புரிமை
9. நாட்டின் நிதிய வரியினில் குறைந்தபட்சம் 15 சதவீதமாவது சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் நடைபெறுதல் வேண்டும்.
10. உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பை மேம்படுத்துதல்.
11. பசுமை மற்றும் சுற்றுச்சூழல் இணக்க நிறுவனங்களை ஊக்குவித்தல்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

12. பள்ளி மற்றும் கல்லூரி அளவில் மாணவர்களுக்காக தொழில்முனைவை ஊக்கப்படுத்துதல்
13. கடனுதவி மற்றும் அரசு ஆதரவு, போன்றவற்றின் மூலம் தொழில் முனைவை ஊக்கப்படுத்துதல்.
14. அதிகளவிலான பெண் தொழில்-முனைவோர்கள் மற்றும் அது போன்ற நிறுவனங்களுக்கான அதிக வாய்ப்புகள்.
15. சிறு மற்றும் குறு தொழில்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவை ஏற்படுத்துதல்
16. ஆதிக்க போக்கை உருவெடுப்பதற்காக சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவு.
17. உயர் மட்ட சிறந்த நிலையை அடைவதற்காக பெருநிறுவன சமூகப் பொறுப்பு
18. ஊழலற்ற / நியாய வர்த்தக முறைக் குறியீடு
19. ஏழைகளை தங்கள் சொந்த சுயநல பயன்பாட்டிற்காக அழிக்காமல் நெறிமுறையான வர்த்தகச் செயல்முறையைப் பின்பற்றுதல்.
20. வர்த்தகங்கள் நெறிமுறையாக நடத்தப்படுதல் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பில் ஈடுபடுதல்.
21. வர்த்தகங்களானது சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மதிப்புக்களை உருவாக்கி பகிர்கிறது.

**கட்டமைப்பு மற்றும் நகரமயமாக்கல்**

1. இந்தியா 500 திட்டமிடப்பட்ட உலகத் தரம் வாய்ந்த நகரங்களை கட்டமைத்து மேம்படுத்துகிறது.
2. தரமான, அனைத்து காலநிலையிலான சாலைகளானது நாட்டின் அனைத்து பகுதிகளையும் இணைக்கிறது.
3. இந்தியா அதன் அனைத்துக் குடிமக்களுக்கும் ஒரு பாதுகாப்பான, நம்பகமான மற்றும் விரைவான பொதுப் போக்குவரத்து போன்றவற்றிற்கான அணுகலைக் கொண்டுள்ளது.
4. அனைத்து இந்தியர்களுக்கும் 24/7 மணி நேரமும் பொருளாதார மற்றும் நம்பகத்தன்மை ஆற்றலாக கொண்டுள்ளனர்.
5. அனைத்து இந்தியர்களுக்கும் தரமான மற்றும் மலிவு விலையிலான வீடானது வழங்கப்பட்டுள்ளது.
6. ஒவ்வொரு இந்தியருக்கும் தூய்மையான குடி தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளுக்குமான அணுகல் உள்ளது.
7. சிறந்த சாலை இணைப்பு.
8. நெடுஞ்சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகளின் மூலம் நகரங்களை சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களுடன் ஒன்றிணைத்தல்.
9. அனைத்து கிராமங்களுக்கும் சாலை மூலமான அணுகலைக் கொண்டிருத்தல்
10. சிறந்த உள்நகர மற்றும் நகரங்களுக்கிடையேயான அணுகுமுறை மற்றும் சுழற்சி சாலை.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

11. அதிகளவிலான சிமெண்ட்டின் மூலமாக உயர்த்தப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள்
12. முறையான இணைப்புடன் கூடிய அகலமான சாலைகள்.
13. உலகத்தரம் வாய்ந்த நகரங்கள் உருவாக்கப்பட உள்ளன.
14. 1-2-3 ம் தர நகரங்களின் பளுவைக் குறைப்பதற்காக அதிகளவிலான துணை நகரங்கள் மற்றும் துணை சிறு நகரங்களைக் உருவாக்குதல்.
15. திட்டமிடப்பட்ட நகரங்கள் மற்றும் நகரக் கட்டமைப்பு
16. ஆசியப் பெருநகரங்களோடு ஒப்பிடத்தக்க வகையிலான நன்கு திட்டமிடப்பட்ட நகரங்களை உருவாக்குதல்.
17. 74வது சட்டத்திருத்தத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேயருக்கும் மாநில அரசுக்கும் இடையிலான பொறுப்புகளை வரையறுத்தல்.
18. தடையில்லா மின்சாரம் வழங்கல்
19. வளர்ந்து வருகின்ற தேவைக்கேற்ப விநியோகத்தின் ஆற்றலை பெருக்க வேண்டும்.
20. அனைத்துப் பகுதிகளிலும் மின்சாரம் மற்றும் ஆற்றல் கிடைக்கப் பெறுதல் வேண்டும்.
21. சிறந்த அளவிலான மின்சாரக் கையிருப்பு
22. அனைவருக்கும் மலிவு மற்றும் அதிகளவிலான ஆற்றல்
23. நல்ல தரமான வடிகால் மற்றும் சுகாதார அமைப்பு.
24. 24 × 7 மணி நேரமும் பாதுகாப்பான அனைத்து இடங்களுக்கும் செல்லக் கூடிய குடி தண்ணீர் வழங்கல்.
25. அனைவருக்கும் தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம்.
26. சுகாதாரம் மற்றும் அதிகளவிலான தூய்மை பற்றிய விழிப்புணர்வு.

**சுகாதாரம்**

1. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இலவச மருத்துவ வசதி
2. உலகளாவிய சுகாதார நலன்: மலிவுத்தன்மை, அணுகுத்தன்மை, மற்றும் நலவசதிகளை உறுதிப்படுத்துகின்ற தரமான சுகாதார நல அமைப்பை ஏற்படுத்துதல்.
3. அனைத்து செல்வங்களையும் ஈடுகட்ட அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு.
4. ஒவ்வொரு 1000 நோயாளிகளுக்கும் குறைந்தபட்சம் 1 மருத்துவர் மற்றும் 3 துணை மருத்துவர் இருக்க வேண்டும்.
5. நாடு முழுவதும் 5 கி.மீ தொலைவில் மருத்துவ மையங்களை நிறுவுதல்
6. அனைத்து மருத்துவமனைகளிலும் ஆம்புலன்ஸ் மற்றும் அணுகமுடியாத இடங்களுக்கு நடமாடும் மருத்துவ மையங்கள்.
7. அடிமட்ட அளவில் மருத்துவ ஊழியர்களைப் பணியமர்த்தல்
8. ஒவ்வொரு இந்தியருக்கும் அனைத்து வசதிகளையும் கொண்ட மற்றும் சேவை வழங்கக்கூடிய மருத்துவ வசதியை, அணுகுவதற்கான எளிமையான மற்றும் மலிவுத் தன்மையை கொண்டிருத்தல்

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

9. இந்தியாவானது சுகாதார அமைப்பின் அனைத்து நிலைகளிலும் அளவிடப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்தல்.
10. ஒவ்வொரு இந்தியரும் தூய்மையான, சுகாதாரமான சூழ்நிலைகளில் வாழ்கின்றனர். அவர்கள் தடுக்கப்படக் கூடிய நோய்களிலிருந்து விடுபட்டவர்களாவார்கள்.
11. அனைத்து முக்கிய 40 சுகாதாரக் குறியீட்டிலும் இந்தியாவானது முதல் 10 நாடுகளுக்குள் உள்ளது.
12. ஒவ்வொரு மருத்துவமனையும் பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் வசதிகளைக் கொண்டிருத்தல்.
13. அரசு மருத்துவ மனைகளில் மேம்படுத்தப்பட்ட வசதிகள்
14. நவீன தொழில்நுட்பம் கொண்ட அதிகளவிலான மருத்துவ மனைகள் நிறுவப்பட வேண்டும்.
15. வெளிநாட்டு பள்ளிகளுடன் இணைந்து நல்ல தரமான மருத்துவப் பள்ளிகளை உருவாக்குதல்.
16. இருக்கின்ற இடத்திலேயே மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக தொலை மருத்துவம்
17. நோய்கள் தொடர்பான சமூகப் பழக்கங்கள் மற்றும் வாழ்க்கை-முறையைப் பற்றிய பொது விழிப்புணர்வு.
18. சுகாதாரச் சேவைகள், வெவ்வேறு நோய்கள் மற்றும் குணப்படுத்தும் முறைகள் மற்றும் நோய்த்தடுப்பு போன்றவற்றில் சமூகத்தினரின் விழிப்புணர்வை அதிகரித்தல்.
19. ஒவ்வொரு பள்ளிகளிலும் யோகா, ஆயுர்வேதா மற்றும் தூய்மைத்தன்மை வலியுறுத்தல் மற்றும் நோய்தடுப்பு ஆகியவற்றில் அட்டவணை இருக்க வேண்டும்.
20. அடிமட்ட அளவின் அனைத்து வகைகளிலும் சுகாதாரக் கவனத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.
21. முதன்மை பள்ளிக் கல்வியில் சுகாதார விழிப்புணர்வை உருவாக்குதல்
22. தேவையான தனிநபர் சுகாதார வசதிகளை கொண்டிருத்தல்
23. குழந்தை இறப்பு விகிதத்தை குறைத்தல் மற்றும் தாய்மார்களின் நலனை அதிகரித்தல்.
24. குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் களைதல்
25. பெண்கள் மற்றும் குழந்தைகளின் சுகாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும்
26. AIDS இல்லா இந்தியா
27. நோய்கள் மற்றும் கருத்தடைச் சாதனங்கள் பயன்பாட்டிற்கான விழிப்புணர்வு.

**சுற்றுச்சூழல்**

1. நிலையான வளர்ச்சிக்கான மற்றும் சுற்றுச்சுழல் பாதுகாப்பிற்கான உலகளாவிய தரநிலையாக இந்தியா திகழ்கிறது.
2. இந்தியாவானது காற்று மாசுபாட்டை குறைத்து மாற்று சக்திக்கான மூலாதாரங்களை அதிகரிக்கிறது.

3. இந்தியாவானது 33% பசுமை பரப்பு மற்றும் பல்வகை வன உயிரினங்களைக் கொண்டுள்ளது.
4. இந்தியா முன் மாதிரியான நீர் மற்றும் கழிவு மேலாண்மை அமைப்புகள் மூலம் நீர் மற்றும் நில மாசுபாட்டினை கட்டுப்படுத்துகிறது
5. அனைத்து இந்தியக் குடிமக்களும் சுற்றுச்சூழல் நிலை பற்றிய அறிவு மற்றும் விழிப்புணர்வு தொடர்பான பொறுப்பினைப் பெற்றிருத்தல் வேண்டும்
6. பசுமை மற்றும் நீடித்த வளர்ச்சி
7. இயற்கை வளங்களின் நீடித்த மற்றும் நிலைத்த பயன்பாடு.
8. சுற்றுச்சூழல் தொடர்பான விசயங்களில் கவனமாக இருக்கும் அதே வேளையில் உள்ளடங்கிய மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதிபடுத்துதல்.
9. சுற்றுச்சூழல் சமநிலை மீட்டெடுக்கப்பட்டது
10. சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் மாசுபாடு இல்லாத வளர்ச்சி
11. இயற்கை வளங்களின் பாதுகாப்பு
12. பசுமை மற்றும் சுத்தமான இந்தியா
13. காற்று மாசுபாட்டிலிருந்து விடுபட்ட நிலை.
14. சுத்தமான எரிபொருள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஊக்குவித்தல்.
15. பசுமை நிறுவனங்களுக்கான கொள்கை முன் முயற்சிகள் மற்றும் வரி சலுகைகள் வழங்குதல்.
16. புவி வெப்பமடைதலை குறைத்தல்
17. குறைந்தது 30 சதவீத நிலங்கள் காடுகளால் கவரப்பட்டிருக்க வேண்டும்
18. காடுகளைப் பாதுகாத்தல்
19. சாலையோரங்களில் மரங்களை நடுதல்
20. காடுகளை அழித்தலுக்கு எதிராக கடுமையான விதிமுறைகளை அமைத்தல்
21. வனப்பகுதிகளை அதிகரித்தல் மற்றும் அழிந்து வரும் இனங்களின் வசிப்பிடத்தை பாதுகாத்தல்
22. பாரம்பரியமிக்க மற்றும் வனவிலங்குகளை பாதுகாத்தல்
23. சிறந்த முறையில் நீரினை பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல் மேம்படுத்துதல்
24. குறைவாக நீரினை பயன்படுத்துதல்
25. மழைநீர் சேகரிப்பு
26. மண்ணரிப்பைத் தடுத்தல்
27. முறையான கழிவு அகற்றல் முறை
28. உள் மற்றும் தொழில்துறை கழிவுகளை நிர்வகித்தல்
29. கழிவுகளைப் பிரித்தல்
30. அனைவருக்கும் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு.
31. சுற்றுச்சூழல் ரீதியான கவனம் மற்றும் குறைந்த மாசுபாடு உள்ள மாநிலமாக இருத்தல்.
32. சமுதாய அர்ப்பணிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்பு.
33. குடிமக்களை சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்புகளினை வாங்குவதற்கு ஊக்கப்படுத்துதல்

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

34. சுற்றுச்சூழல் சேதத்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய தகவல்கள் பற்றாக்குறை.

**கலை,விளையாட்டு மற்றும் இலக்கியம்**

1. கலை, விளையாட்டு மற்றும் இலக்கியம் ஆகியவை தகுந்த அங்கீகாரம் மற்றும் நிதி நன்மைகளை தருவதோடு மட்டுமல்லாமல் ஈர்க்கத்தக்க வேலைக்கான வாய்ப்புகளாகவும் இருக்கிறது..
2. கலை, விளையாட்டு மற்றும் இலக்கியத்தில் போட்டித் தன்மையை அடைவதற்கு இந்தியா உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்புக்களை உருவாக்குகிறது.
3. கலை, விளையாட்டு மற்றும் கல்வியில், இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்குவதன் மூலம் அடிமட்ட அளவில் இருந்து திறமையை கண்டறிதல் மற்றும் மேம்படுத்துதல்.
4. நாடு முழுவதும் உள்ள உள்ளூர் கலை மற்றும் கலாச்சாரம் ஆகியவை பாதுகாக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது

**ஆளுகை மற்றும் பொது நிர்வாகம்**

1. இந்தியக் குடிமக்கள் ஒரு நல்ல அமைதியான மற்றும் பாதுகாப்பான சமூகத்தில் வாழ்கின்றனர்
2. ஒவ்வோர் இந்தியனும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் திறமையான நிர்வாக இயந்திரங்களை பெற்று வருகின்றனர்.
3. இந்திய நீதித்துறையானது அனைத்து குடிமக்களுக்கும் சரியான நேரத்தில் நீதி கிடைப்பதை உறுதி செய்கிறது.
4. இந்தியாவானது விழிப்புணர்வு அடைந்த இளம் தலைவர்களை அதன் அரசியல் பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS